நெடுஞ்சாலைப் பாலங்களுக்குரிய – மேற்கட்டுமானத்திற்கான

தரப்படுத்தப்பட்ட வரைபடங்கள் அடங்கிய - 11 தொகுதிகள் கொண்ட புத்தகங்கள்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்!

சென்னை, ஜூலை 27-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (26.7.2024) தலைமைச் செயலகத்தில், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை சார்பில் நெடுஞ்சாலைப் பாலங்களுக்குரிய மேற்கட்டுமானத்திற்கான தரப்படுத்தப்பட்ட வரைபடங்கள், 11 தொகுதிகளாக மாநில நெடுஞ்சாலைத் துறையின் திட்டம், வடிவமைப்பு மற்றும் ஆய்வு, அலகினால் வடிவமைத்துத் தயாரிக்கப்பட்டுள்ள "STANDARD PLANS FOR HIGHWAY BRIDGES - RCCT BEAM AND SLAB SUPER STRUCTURE" என்ற புத்தகங்களை வெளியிட்டார்.

அதன் விபரம் வருமாறு:-

நாட்டின் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சிக்குச் சாலை கட்டமைப்பு மற்றும் பாலங்கள் கட்டுமானம் மிகவும் அத்தியாவசியமானதாகும். சிறந்த தரம் மற்றும் இணைப்பு வசதியுடன் கூடிய சாலை கட்டமைப்பின் காரணமாக, இந்தியாவின் வளர்ச்சி அடைந்த மாநிலங்களின் முன்னணிப் பட்டியலில் தமிழ்நாடு இடம் பெற்றுள்ளது.

தமிழகத்தின் மொத்த சாலைகளின் நீளம் 2.71 இலட்சம் கி.மீ. இதில் 67,216 கி.மீ. நீளச் சாலைகள் மாநில நெடுஞ்சாலைத் துறையின் கட்டுப்பாட்டிலும், 6,805 கி.மீ. நீள தேசிய நெடுஞ்சாலைகள், ஒன்றிய அரசின் சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகத்தின் கட்டுப்பாட்டிலும் உள்ளன. இதர சாலைகள் மாநகராட்சி, நகராட்சி, பேருராட்சி மற்றும் ஊரக வளர்ச்சித் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளன. சாலை கட்டமைப்பின் ஒரு பகுதியாக, 1,39,287 பாலங்கள் மாநில நெடுஞ்சாலைத் துறையின் மூலமாகக் கட்டப்பட்டுப் பராமரிப்பில் உள்ளன.

மாநிலத்தின் அனைத்துத் துறைகளின் வளர்ச்சியையும் மேம்படுத்த மற்றும் மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திட பாதுகாப்பான சாலை கட்டமைப்புத் தேவைப்படுகிறது. எனவே, தேவையான இடங்களில் முறையே ஆறுகளின் குறுக்கே உயர்மட்டப் பாலங்கள், இரயில்வே கடவுகளில் மேம்பாலங்கள்/கீழ்பாலங்கள், பெருநகரம், மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் சாலை மேம்பாலங்கள் மற்றும் உயர்மட்ட நீள் பாலங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

நெடுஞ்சாலைப் பாலங்களுக்குரிய, மேற்கட்டுமானத்திற்கான தரப்படுத்தப்பட்ட வரைபடங்கள் 1990, 1991 மற்றும் 1995ஆம் ஆண்டுகளில் ஒன்றிய அரசின் தரைவழி போக்குவரத்து அமைச்சகத்தால் (சாலை பிரிவு) வெளியிடப்பட்டன. பாலங்களின் கட்டுமான முறையில் ஏற்பட்ட பல்வேறு தொழில் நுட்ப முன்னேற்றங்கள் மற்றும் வடிவமைப்பில் பெற்ற அறிவுசார் அனுபவத்தால் வடிவமைப்பு முறையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. இம்மாற்றங்களைப் பின்பற்றிப் பாலங்கள் வடிவமைக்கப்பட்டு வருகின்றன. இதனால் பாலங்களுக்கான கட்டுமான மதிப்பீடு குறைந்துள்ளது. புதிய தரப்படுத்தப்பட்ட வரைபடங்கள் சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகத்தால் இது வரை வெளியிடப்படவில்லை.

இவ்வரைபடங்களுக்கான தேவையை உணர்ந்து, தற்போது, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறையால், நெடுஞ்சாலைப் பாலங்களுக்குரிய, மேற்கட்டுமானத்திற்கான தரப்படுத்தப்பட்ட வரைபடங்கள், 11 தொகுதிகளாக மாநில நெடுஞ்சாலைத் துறையின் திட்டம், வடிவமைப்பு மற்றும் ஆய்வு, அலகினால் வடிவமைத்துத் தயாரிக்கப்பட்டிருக்கின்றன.

இவற்றில், 10 தொகுதிகள் பல்வேறு வழித்தடங்கள்/சாலை அகலங்களுக்கான Reinforced Cement Concrete TBeam and Slab superstructure வரைபடங்கள் ஆகும். ஒவ்வொரு தொகுதியிலும் 12 மீட்டர் முதல் 30 மீட்டர் வரையிலான, 16 வகை நீளமுள்ள பால மேற்தள வரைபடங்கள் உள்ளன. ஆக மொத்தம் தற்போது, 160 வகையிலான பால மேற்தளத்திற்கான வரைபடங்கள் வெளியிடப்பட்டுள்ளது.

மீதமுள்ள ஒரு தொகுதி, 25 மீட்டர், 30 மீட்டர் மற்றும் 35 மீட்டர் நீளமுள்ள பல்வேறு வழித்தடங்களுக்கான Precast Prestressed Concrete Post Tensioned IGirder and Reinforced Concrete slab type Composite Super structure வரைபடங்கள் 9 வகைகளை உள்ளடக்கியது.

இத்தொகுப்புகளின் வெளியீட்டினால் பாலங்கள் கட்டுமானப் பணிகளில் பாலங்களின் மேற்தளத்திற்கான ஒரு Ready - Reckoner ஆகவும், மேற்தளத்திற்கான வடிவமைப்பு மற்றும் வரைபடம் தயாரிப்பதற்கான நேரம் தவிர்க்கப்படும், மாநிலம் முழுவதும், பால மேற்தள பணியில் சீரான அளவிலான Shuttering உபயோகிக்கப்படும், பால கருத்துருக்கள் தயாரிப்பது எளிதாகும், ஒரே பாலப் பணியில், தேவைப்படும் இடங்களில், பல்வேறு நீளமுள்ள மேற்தளங்களை கட்டுவதற்கு ஏதுவாக அமையும், போக்குவரத்து நெரிசலான பகுதிகளில் கட்டுமானத்தை துரிதபடுத்த Precast Superstructure வரைபடங்கள் மிகவும் உதவியாக இருக்கும்.

மேலும், நாட்டின் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றும் உட்கட்டுமானத்தை மேம்படுத்திட இதுபோன்ற தொழில் நுட்ப முயற்சிகளைத் தொடர்ந்து இந்த அரசு எடுத்துவருகிறது.

இந்த நிகழ்ச்சியில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், பொதுப் பணி, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை செயலாளர் டாக்டர் இரா.செல்வராஜ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இவ்வாறு அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திராவிட இயக்கத் தமிழர் பேரவை –3 ஆம் ஆண்டு

'கருஞ்சட்டை' விருதுகள் வழங்கும் விழா!

அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் – விருதுகள் வழங்கிச் சிறப்புரை!

சென்னை, ஜூலை 27-

திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் 3ஆம் ஆண்டு 'கருஞ்சட்டை' விருது வழங்கும் விழா இன்று (27.7.2024 - சனிக்கிழமை) மாலை 6.00 மணியளவில் தேனாம்பேட்டை - அன்பகத்தில் நடைபெறுகிறது.

இவ்விழாவில் மார்க்சியப் பொதுவுடைமைக் கட்சி துணைப் பொதுச் செயலாளர் வாலாசா வல்லவன், தொல்காப்பியர் தமிழ்ச் சங்கத் தலைவர் புலவர் வெற்றியழகன், தி.மு.க. கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவை மாநிலச் செயலாளர் பொள்ளாச்சி மா.உமாபதி ஆகியோர் விருதுகளைப் பெறுகின்றனர்.

இவ்விழாவிற்கு செல்வின் சௌந்தரராஜன் தலைமை வகிக்கிறார்.

திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் தலைவர் சுப.வீரபாண்டியன் நோக்கவுரையாற்றுகிறார்.

இரா.உமா வரவேற்புரையாற்றுகிறார்.

சிற்பி செல்வராஜ், எதிழ் இளங்கோவன், ஆ.சிங்கராயர், பெல் ராஜன், மகாலட்சுமி, அ.இல.சிந்தா, ஷேக் தாவூத், லாரன்ஸ், காசு. நாகராஜ், முத்தையா குமரன், மு.மாறன், ப.புலேந்திரன், வேடசந்தூர் ரவி, சந்தானம், நெல்லை பாபு, பொற்கொடி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இவ்விழாவில் 'கருஞ்சட்டை' விருதுகளை - போக்கு வரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் வழங்கிச் சிறப்புரையாற்றுகிறார்.

டாக்டர் கனிமொழி சோமு எம்.பி. வாழ்த்துரை வழங்குகிறார்.

எழுத்தாளர் சூர்யா சேவியர் பாராட்டுரை ஆற்றுகிறார்.

இராம.வைரமுத்து தொகுப்புரையாற்றுகிறார்.

ப.எட்வின் நன்றி கூறுகிறார்.

நாகர்கோவில் மாநகராட்சி பகுதிகளில்

ரூ.2.16 கோடி மதிப்பீட்டில் வளர்ச்சித் திட்டப் பணிகள் துவக்கம்!

மாவட்டச் செயலாளர் - மேயர் ரெ.மகேஷ் துவக்கி வைத்தார்!

கன்னியாகுமரி, ஜூலை 27-

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், நாகர்கோவில் மாநகராட்சிக்கு உட்பட்ட வட்டவிளை பகுதியில் தலா ரூபாய் 85 இலட்சம் மதிப்பீட்டில் இரண்டு மறுசுழற்சி மைய கட்டிடம் அமைக்க அடிக்கல் நாட்டும் பணிகளையும், கோணம் பகுதியில் அமைந்துள்ள அறிவுசார் மைய வளாகத்தில் ரூபாய் 30 இலட்சம் மதிப்பீட்டில் கழிவறை அமைக்க அடிக்கல் நாட்டும் பணியையும், கோணம் பகுதியில் அமைந்துள்ள தொழில்நுட்ப கல்லூரி அருகில் தலா ரூபாய் 5 இலட்சம் மதிப்பீட்டில் இரண்டு பயணிகள் நிழற்குடை அமைக்க அடிக்கல் நாட்டும் பணிகளையும், விவேகானந்தர் தெருவில் ரூபாய் 6 இலட்சம் மதிப்பீட்டில் கான்கிரீட் தளம் அமைக்கும் பணி ஆகிய பணிகளை கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் துவக்கி வைத்தார்.

நிகழ்வில் நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் நிஷாந்த் கிருஷ்ணா, துணை மேயர் ம.மேரி பிரின்சி லதா, உதவிப் செயற் பொறியாளர் மாலா, உதவிப் பொறியாளர் சுஜின், இளநிலை பொறியாளர் தேவி, மண்டல தலைவர்கள் கு.அகஸ்டினா கோகிலவாணி, பா.செல்வகுமார், மாமன்ற உறுப்பினர்கள் அ.அருள் சபிதா ரெக்ஸலின், க.சிஜி, சு.அனிலா, தொழில்நுட்ப அலுவலர்கள் பாஸ்கர், ரவி, பத்மநாபன், மாநகராட்சி அதிகாரிகள், மாநில மகளிர் அணி செயலாளர் ஜெ.ஹெலன் டேவிட்சன், நாகர்கோவில் மாநகர செயலாளர் வழக்கறிஞர் ப.ஆனந்த், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆர்.சதாசிவன், பகுதி செயலாளர்கள் சேக்மீரான், ஜீவா உட்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

காட்டாற்று வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட

லாரி ஓட்டுநர்கள் இருவரின் குடும்பங்களுக்கு - தலா ரூ.3 லட்சம் நிதி!

முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஜூலை 27-

கர்நாடகா மாநிலம், வடகன்னட மாவட்டம், அங்கோலா வட்டம், சிரூரு பகுதியில் பெய்த கனமழை காரணமாக ஏற்பட்ட நிலச்சரிவு மற்றும் காட்டாற்று வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்த நாமக்கல் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டத்தைச் சேர்ந்த லாரி ஓட்டுநர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

அது வருமாறு:-

நாமக்கல் மாவட்டம், புதுச்சத்திரம் குறுவட்டம், தாத்தையங்கார்பட்டி கிராமத்தைச் சேர்ந்த சின்னன்னன் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை உள் வட்டம், எம். வெள்ளாப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த முருகன் ஆகிய இருவரும் கடந்த 16.07.2024 அன்று எல்.பி.ஜி. டேங்கர் லாரியில் ஓட்டுநர்களாக சென்றபோது கர்நாடகா மாநிலம், வடகன்னட மாவட்டம், அங்கோலா வட்டம், சிரூரு பகுதியில் பெய்த கனமழை காரணமாக ஏற்பட்ட நிலச்சரிவு மற்றும் காட்டாற்று வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்தனர் என்ற துயரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்தேன். மேலும், இந்த விபத்தில் உயிரிழந்த லாரி ஓட்டுநர்களின் குடும்பத்தினருக்கும், அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

வாட்ஸ் அப்பில் வந்த செய்தி!

தமிழ்நாட்டை வஞ்சித்த ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து

விருதுநகரில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

மாவட்டச் செயலாளர்கள் - அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர், இராமச்சந்திரன் - அமைச்சர் தங்கம் தென்னரசு அறிக்கை!

விருதுநகர், ஜூலை 27-

விருதுநகர் மாவட்டச் செயலாளர்கள் தெற்கு - அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன், வடக்கு - அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் அறிவுறுத்தலின்படி, "ஒன்றிய நிதி நிலை அறிக்கையில் தமிழ்நாட்டை வஞ்சித்த பாசிச பா.ஜ.க. அரசைக்" கண்டித்து இன்று (27.07.2024-சனிக்கிழமை) காலை 10.00 மணியளவில் விருதுநகர், மாரியம்மன் கோவில் திடலில் "மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்" நடைபெறவுள்ளது.

இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் விருதுநகர் தெற்கு/வடக்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் மாநில/மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பேரூர், பகுதிக் கழகச் செயலாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள், வட்ட, கிளைக் கழக நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளனர்.

திருப்பத்தூர் வட்டாட்சியர் அலுவலகம் எதிரில்

ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து இன்று ஆர்ப்பாட்டம்!

மாவட்டச் செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. அறிக்கை!

திருப்பத்தூர்,ஜூலை.26-

திருப்பத்தூர் மாவட்டச் செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. அறிக்கை வருமாறு:

ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டை வஞ்சித்த பாசிச பா.ஜ.க. அரசைக் கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் திருப்பத்தூர் வட்டாட்சியர் அலுவலகம் எதிரில் இன்று (27.07.2024 சனிக்கிழமை) காலை 9.00 மணியளவில் நடைபெறுகிறது.

இதில் நான் மாவட்டச் செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. கலந்து கொண்டு கண்டன ஆர்ப்பாட்டத்தை தொடங்கி வைத்து உரை நிகழ்த்துகிறேன்.

அதுசமயம் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், அனைத்து சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், நகர மன்ற, ஒன்றிய குழு, பேரூராட்சி தலைவர்கள் மற்றும் துணை தலைவர்கள், மாவட்ட கவுன்சிலர்கள், கழக முன்னோடிகள், கழக உடன்பிறப்புகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொண்டு தங்களின் கண்டனங்களை தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சி
கட்டடத்துறை
க.து.ந.க.எண்.பி1/1445/2024

மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

கண்காணிப்பு பொறியாளர் (கட்டடம்) அவர்களால் கீழ்கண்ட (இரு உறை முறை) பணிக்கு மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்படுகிறது.

Proposed Construction of LPG and Smoke Free LPG System works Various Zones 02, 03, 07.(Two Cover System)

மேலும் விவரங்களுக்கு **http://tntenders.gov.in & www.Chennaicorporation.gov.in** இணையதளம் மூலம் பார்த்து தெரிந்து கொள்ளவும்.

அதிகபட்ச பணியின் மதிப்பு **ரூ.395.47 இலட்சம்** குறைந்த பட்ச பணியின் மதிப்பு **ரூ.272.86 இலட்சம்**	முன்வைப்பு தொகை : பணியின் மதிப்பு தொகையில் **1%**
ஒப்பம் சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம் :	**22.08.2024 அன்று பிற்பகல் 3.00 மணி வரை**
ஒப்பம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் :	**23.08.2024 அன்று பிற்பகல் 3.30 மணி வரை**

செ.ம.தொ.இ/2614/ஒப்பந்தப்புள்ளி/2024 **கண்காணிப்பு பொறியாளர் (கட்டடம்)**

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், நாகர்கோவில் மாநகராட்சிக்கு உட்பட்ட வட்டவிளை பகுதியில் தலா ரூபாய் 85 இலட்சம் மதிப்பீட்டில் இரண்டு மறுசுழற்சி மைய கட்டிடம் அமைக்க அடிக்கல் நாட்டும் பணிகளையும், கோணம் பகுதியில் அமைந்துள்ள அறிவுசார் மைய வளாகத்தில் ரூபாய் 30 இலட்சம் மதிப்பீட்டில் கழிவறை அமைக்க அடிக்கல் நாட்டும் பணியையும், கோணம் பகுதியில் அமைந்துள்ள தொழில்நுட்ப கல்லூரி அருகில் தலா ரூபாய் 5 இலட்சம் மதிப்பீட்டில் இரண்டு பயணிகள் நிழற்குடை அமைக்க அடிக்கல் நாட்டும் பணிகளையும் மற்றும் விவேகானந்தர் தெருவில் ரூபாய் 6 இலட்சம் மதிப்பீட்டில் கான்கிரீட் தளம் அமைக்கும் பணி ஆகிய பணிகளை கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் துவக்கி வைத்தார். நிகழ்வில் நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் நிஷாந்த் கிருஷ்ணா, துணை மேயர் ம.மேரி பிரின்சி லதா, மாலா, சுஜின், தேவி, கு.அகஸ்டினா கோகிலவாணி, பா.செல்வகுமார், அ.அருள் சபிதா ரெக்ஸலின், க.சிஜி, சு.அனிலா, பாஸ்கர், ரவி, பத்மநாபன், ஜெ.ஹெலன் டேவிட்சன், வழக்கறிஞர் ப.ஆனந்த், ஆர்.சதாசிவன், சேக்மீரான், ஜீவா உட்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.